**செய்தி வெளியீடு எண்: 714** **நாள்: 06.10.2018**

**செய்தி வெளியீடு**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போதைய கனமழை மற்றும் பருவமழைக் காலங்களில் முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகளை கண்காணிக்க 15 மண்டலங்களுக்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனம்!**

**தமிழகத்தில் பருவமழையை எதிர்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை தயார்நிலையில் உள்ளதாக மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தகவல் !!**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில், இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ள கனமழை மற்றும் பருவமழையை முன்னிட்டு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம் மற்றும் பேரூராட்சிகள் ஆகிய துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் 05.10.2018 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இவ்வாய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த 2 ஆண்டுகளில் விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளில் குறிப்பாக அம்பத்தூர், வளசரவாக்கம், ஆலந்தூர் ஆகிய மண்டலங்களில் 400 கி.மீ. தூரத்திற்கு ரூ.1200 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இதனால், அப்பகுதியில் குடியிருக்கும் சுமார் 12 இலட்சம் மக்கள் வெள்ளப் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனர். இப்பணிகள் தரமாகவும், நல்ல முன்னேற்றத்துடனுடம் உள்ளதாக உலகவங்கி பாராட்டு தெரிவித்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகளை கண்காணிக்க 15 மண்டலங்களுக்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, இன்று (06.10.2018) முதல் மண்டல அலுவலர்களுக்கான (Zonal Officer) ஆய்வு மற்றும் நிவாரணப் பணிகளை துவங்க உள்ளார்கள்.

| வ. எண் | கண்காணிப்பு அலுவலர்கள் பெயர் | மண்டலம் | கண்காணிப்பு அலுவலர்கள் தொலைபேசி எண்கள் | மண்டல அலுவலர்கள் தொலைபேசி எண்கள் |
|---|---|---|---|---|
| 1. | திரு.கே.நந்தகுமார், இ.ஆ.ப.,<br>அரசு செயலாளர்,<br>தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் | திருவொற்றியூர்<br>மண்டலம்–1 | 9499956201 | 9445190001 |
| 2. | திரு.ஆர்.கண்ணன், இ.ஆ.ப.,<br>இயக்குநர்,<br>ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் | மணலி<br>மண்டலம்–2 | 9499956202 | 9445190002 |
| 3. | திரு.சந்தோஷ் பாபு, இ.ஆ.ப.,<br>அரசு செயலாளர்,<br>தகவல் தொழில் நுட்ப துறை | மாதவரம்<br>மண்டலம்–3 | 9499956203 | 9445190003 |
| 4. | திரு.டி.என்.வெங்கடேஷ், இ.ஆ.ப.,<br>மேலாண்மை இயக்குநர், கோ–ஆப்டெக்ஸ் | தண்டையார்பேட்டை<br>மண்டலம்–4 | 9499956204 | 9445190004 |
| 5. | டாக்டர்.பி.உமாநாத், இ.ஆ.ப.,<br>மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் | இராயபுரம்<br>மண்டலம்–5 | 9499956205 | 9445190005 |
| 6. | திரு.சி.காமராஜ், இ.ஆ.ப.,<br>மேலாண்மை இயக்குநர்,<br>பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை வளர்ச்சி | திரு.வி.க.நகர்<br>மண்டலம்–6 | 9499956206 | 9445190006 |
| 7. | திரு.எம்.பாலாஜி, இ.ஆ.ப.,<br>அரசு கூடுதல் செயலாளர்,<br>பொதுப்பணித்துறை | அம்பத்தூர்<br>மண்டலம்–7 | 9499956207 | 9445190007 |
| 8. | டாக்டர்.ஆர்.ஆனந்தகுமார், இ.ஆ.ப.,<br>அரசு கூடுதல் செயலாளர், நிதித்துறை | அண்ணாநகர்<br>மண்டலம்–8 | 9499956208 | 9445190008 |
| 9. | திரு.ஷன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப.,<br>ஆணையாளர்,தமிழ்நாடு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், | தேனாம்பேட்டை<br>மண்டலம்–9 | 9499956209 | 9445190009 |
| 10. | திரு.சி.விஜயராஜ் குமார், இ.ஆ.ப.,<br>அரசு செயலாளர், சமூக நலம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை | கோடம்பாக்கம்<br>மண்டலம்–10 | 9499956210 | 9445190010 |
| 11. | திருமதி.ஆர்.சீதாலட்சுமி, இ.ஆ.ப.,<br>பதிவாளர், தமிழ்நாடு இசை மற்றும் கலைப்பண்பாட்டு பல்கலைகழகம் | வளசரவாக்கம்<br>மண்டலம்–11 | 9499956211 | 9445190011 |
| 12. | திரு.கிரண் குர்ராலா, இ.ஆ.ப.,<br>துணை செயலாளர், பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை | ஆலந்தூர்<br>மண்டலம்–12 | 9499956212 | 9445190012 |
| 13. | திரு.கே.பாலசுப்பிரமணியம், இ.ஆ.ப.,<br>துணை செயலாளர், தொழில் துறை | அடையாறு<br>மண்டலம்–13 | 9499956213 | 9445190013 |
| 14. | டாக்டர்.ஆர்.நந்தகோபால், இ.ஆ.ப.,<br>ஆணையாளர், தொழிலாளர் நலத்துறை | பெருங்குடி<br>மண்டலம்–14 | 9499956214 | 9445190014 |
| 15. | டாக்டர்.தாரேஸ் அகமது, இ.ஆ.ப.,<br>இயக்குநர், மாநில ஊரக சுகாதாரத் திட்டம் | சோழிங்கநல்லூர்<br>மண்டலம்–15 | 9499956215 | 9445190015 |

மேலும், சென்னை மாநகரில் 2015ம் ஆண்டு வெள்ளப் பெருக்கிற்கு பிறகு ரூ.150 கோடி மதிப்பீட்டில் 50 கி.மீ. நீளத்திற்கு பல்வேறு இடங்களில் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது, பெருநகர சென்னை மாநகராட்சி நிதி 2018ன் கீழ், ரூ.290 கோடி மதிப்பீட்டில் 117 கி.மீ. நீளத்திற்கு 347 இணைப்பு மழைநீர் வடிகால் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ரூ.150 கோடி மதிப்பீட்டில் 51 கி.மீ. நீளத்திற்கு 130 விடுபட்ட மழைநீர் வடிகால் பணிகள் ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் அனைத்தும் இம்மாத இறுதிக்குள் முடித்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

கோவளம் வடிநிலப்பகுதிகளில் குறிப்பாக சோழிங்கநல்லூர், பெருங்குடி மற்றும் ஆலந்தூர் மண்டலங்களில் 326 கி.மீ. நீளத்திற்கு ரூ.1250 கோடி மதிப்பீட்டில் ஜெர்மன் நாட்டு வங்கி உதவியுடன் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அரசின் ஒப்புதலும், ஜெர்மன் நாட்டு நிதியும் கிடைத்தவுடன் இப்பணிகள் துவங்கப்படும். இதனால் இப்பகுதிகளில் வாழும் சுமார் 8 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

நவீன இயந்திரங்களைக் கொண்டு நீர்நிலைகளில் உள்ள வண்டல்கள் மற்றும் ஆகாயத்தாமரைகள் தூர்வாரப்படும் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இதுநாள்வரை இவ்வியந்திரங்களின் மூலம் 45,000 மெட்ரிக் டன் வண்டல்கள் மற்றும் ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்டு அனைத்து கால்வாய்களும் ஆழம் மற்றும் அகலப்படுத்தப்பட்டு 100 சதவீதம் மழைநீர் வெளியேற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 16 சுரங்கப்பாதைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. பருவமழைக் காலத்தில் சுரங்கப்பாதைகளில் தேங்கி நிற்கும் நீரை வெளியேற்ற உயர்திறன் கொண்ட 60 டீசல் பம்புகளும், தண்ணீர் உட்புகுவதை தடுக்க சாலையின் குறுக்கே சிறிய தடுப்புகளும் அமைக்கப்பட வேண்டும் எனவும், தாழ்வான பகுதிகளில் தேங்கி நிற்கும் மழைநீரை வெளியேற்ற 5 / 7.5 குதிரைத் திறன் கொண்ட 458 மோட்டார் பம்புகளும், 130 ஜெனரேட்டர்களும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களை மழைவெள்ளத்தில் இருந்து காப்பாற்றும் பொருட்டு 109 இடங்களில் படகுகளும், பொதுமக்களை தங்க வைக்க 176 நிவாரண மையங்களும், உணவு வழங்கிட 4 பொது சமையல் அறைகளில் 1500 பேருக்கு சமையல் செய்ய

தேவையான பொருட்களும் மற்றும் கூடுதலாக தேவைப்படின் அனைத்து அம்மா உணவகங்களிலும் உணவு தயாரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மழைக்காலத்தில் ஏற்படும் தொற்றுகளில் இருந்து பொதுமக்களை பாதுகாக்க 44 நிலையான மற்றும் நடமாடும் மருத்துவக் குழுக்களும், 52 இடங்களில் பேரிடர் மீட்புக்குழுக்களும் தயார்நிலையில் உள்ளனர்.

பருவமழையின்போது சாலைகளில் விழுந்த மரங்களை உடனடியாக அகற்ற மண்டலத்திற்கு ஒரு இரவு பணிக்குழுவும், 18 உயர் கோபுர விளக்குகளும், 373 மரம் அறுவை இயந்திரங்களும் தயார்நிலையில் உள்ளன.

சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 115 ஜெட்ராடிங், 30 ஜெட்டிங் மற்றும் சக்ஷன், 43 சூப்பர் சக்கர், 242 தூர்வாரும் இயந்திரங்கள் என மொத்தம் 430 இயந்திரங்கள் மழைக்காலங்களில் ஏற்படும் கழிவுநீர் அடைப்புகளை அகற்ற தயார்நிலையில் உள்ளது. மேலும், கூடுதல் தேவைக்கு கழிவுநீர் லாரிகள் வாடகைக்கு அமர்த்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பருவமழையின்போது, கழிவுநீர் இயந்திரங்களின் செயல்பாடுகள் இணையதள இயக்கி (Google drive) மூலம் கண்காணிக்கப்படும்.

அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரக வளர்ச்சி தலைமையிடங்களில் 24 X 7 மணிநேரமும் இயங்கும் தகவல் கட்டுப்பாட்டு அறைகள் செயல்படுத்தப்படவுள்ளன. இக்கட்டுப்பாட்டு அறைகளில் வருவாய் துறை, பொதுப்பணித்துறை, காவல்துறை, மின்சார வாரியம் மற்றும் தொடர்புடைய துறைகளின் அலுவலர்களுடன் நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி பணியாளர்கள் இணைந்து பணியாற்ற உள்ளார்கள்.

நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் அவசரக்காலங்களில் வெள்ளத்தடுப்பு பணிக்கு தேவைப்படும் மணல் மூட்டைகள் தயார்நிலையில் இருக்கவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், போதுமான அளவில் பிளீச்சிங் பவுடர்களை இருப்பில் வைத்திடவும், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தற்காலிகமாக தங்குவதற்கு ஏதுவாக புயல் பாதுகாப்பு மையங்கள், சமுதாயக் கூடங்கள், பள்ளிக் கட்டடங்கள் மற்றும் பொதுக் கட்டடங்களை தயார்நிலையில் வைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருவமழைக் காலங்களில் நிவாரண நடவடிக்கைகளுக்காக கூடுதலாக நிதி தேவைப்படின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தங்கள் துறை தலைவர்களை அணுகி உடனடியாக தடையின்றி நிதி ஒப்பளிப்பு பெற்றுக்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளதாக, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக

வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய கூடுதல் தலைமைச் செயலாளர்/மேலாண்மை இயக்குநர் திரு.அசோக் டோங்ரே, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் (பொ) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சி.என்.மகேஸ்வரன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் திரு.டி.பிரபு சங்கர், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.பிரவீண் பி.நாயர், இ.ஆ.ப., உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**